

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## அச்சமில்லாத வாழ்விற்கு 'கர்த்தர் ஒருவரே' நமது பெலன்!

இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி "தன் ஜீவனுக்கு அல்லது உயிருக்கு" கர்த்தரே பெலனானவர் என தாவீதைப்போல் விசுவாசிக்கக் கூடுமென்றால், அது அவன் பெற்ற பாக்கியம் என்றே கூற வேண்டும்! (சங்கீதம்.27:1). ஏனெனில், உயிருக்கு பயம்! அல்லது மரண பயம்! என்பதே இவ்வுலகத்தில் உள்ள அனைத்து பயத்திற்கும் சிகரமானது! அப்படியிருக்க, கர்த்தரை தன் உயிருக்கு பெலனாய் கொண்டு விசுவாசித்தவன் மிகுந்த தைரியத்துடன் "..... இனி நான், யாருக்கு அல்லது எதற்கு நான் அஞ்சுவேன்!" என விசுவாச முழக்கம் செய்திட முடியும்! (வசனம்.1)

ஆகிலும் "கர்த்தரின் பெலன் ஒன்றே தனது பாதுகாப்பு" என அறிந்த ஒரு உத்தம விசுவாசி "தன் உயிர் உள்ள நாளெல்லாம், அவருடைய ஆலய பிரகாரத்தில் தங்கியிருந்து" ஜெபிக்கும் கதியை பெற்றிருப்பான்! ஏனெனில், அவனது பெலன், வேறு எதுவின் மீதும் இல்லாமல் "கர்த்தரிடத்தில் மாத்திரமே இருக்கிறபடியால்" அவரது சமூகத்தை நாள்தோறும் நாடி அவரையே சார்ந்து..... இவ்வுலகில் எதற்கும் அச்சமின்றி வாழ்வான்!! (வசனம்.4).

*-tr*

பெட்டகம் 19 ஆகஸ்ட் 2017 பரல்கள் 8




## ஜீவனை பறிக்கும் 'செழிப்பின் உபதேசம்' வேண்டாம்!

ஆஸ்தியை இந்த பூமியில் நிலைநிறுத்தி வாழவிரும்பி இயேசுவிடம் ஒருவன் வந்தான்! (லூக்கா.12:13). அதற்கு அடுத்த வசனத்தில் இயேசு எச்சரித்து கூறிய பதில்: "மனுஷனே! இந்த பூமியில் உன் சொத்தின் பங்கை நிலைநிறுத்த நான் நியமனம் செய்யப்பட்டேன் என்று உனக்கு யார் கூறியது?" என அவனைக் கடிந்து கொண்டார்! குறிப்பாக, இன்றைய பெரும்பான்மையான பெந்தெகோஸ்தே ஸ்தாபன சபைகளிலும், சுயாதீன சபைகளிலும் 'கிறிஸ்துவின் இந்த ஆவிக்கு விரோதமாக' அந்திக்கிறிஸ்துவின் ஆவியில் கறைப்பட்டு 'தங்கள் ஐஸ்வரியத்தை' இந்த பூமியில் நிலைநாட்டுவதற்கு, ஊழியம் என்ற பெயரில் நடக்கும் வஞ்சக செயலை, சிறந்த விசுவாசிகள் கூட 'கண்ணிருந்தும் காணாதவர்களைப்போல்' இருப்பது வேதனை! இந்த பூமியில் 'செழிப்பின் உபதேசம்' பிரசங்கித்து திரள் கூட்டத்தை எளிதில் சேர்க்கலாம்.... ஆனால், அவர்களில் ஒருவராகிலும் ஜீவனுக்குள் பிரவேசித்திருக்க மாட்டார்கள். ஏனெனில், "திரளான ஆஸ்தியில் ஜீவன் இல்லை!" என இயேசு முத்திரையிட்டார்! (வச.15).

அவர் பொறுமையோடு தொடர்ந்து விளக்கிய உவமையில், தன் 'களஞ்சியத்தை' பல வங்கிகளில் சேர்த்து வைத்த ஒரு மனுஷன், இதுவே எனது இளைப்பாறுதல் என தனக்குள் சொல்லிக் கொண்ட அவனை, இந்த உலக மக்கள் 'அறிவாளி' என கூறுவார்கள்.... ஆனால் தேவன் அவனை நோக்கி 'மதிகேடன்' அல்லது 'Empty' ஒன்றும் இல்லாதவன் என்றே கூறினார் (வச.20). ஏனெனில், 'அனேக வருஷங்கள் வாழ்வேன்!' என எண்ணிய அவனிடம் "இன்று இராத்திரி நீ மரித்தால்....." என்ற உண்மையை கூறி "அவன் ஆத்துமா, மரணத்திற்குப் பிறகு, வெறுமையடையும்" என, ஆத்துமாவின் விழிப்பை போதித்தார்! (வச.20). இந்த பூமியின் ஈர்ப்பிலிருந்து மனந்திரும்பி, தேவனையும் அவரது இராஜ்ஜியத்தையும் பொக்கிஷமாய் சேர்த்து வைத்து "தேவனிடத்தில் ஐசுவரியவானாய்" மாறுவதே சீரும் சிறப்புமான நித்திய வாழ்வு என்பதை அறிந்து வாழ்வோமாக! *-Ed*


### பரலோக பொக்கிஷங்கள்

வருடசந்தா ரூ.120.00 ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## பிரசங்கம் கேட்க அல்ல, வாழும் ஜீவியம் காண வேண்டும்!

**யோ**வான்ஸ்நானகனின் இரண்டு சீஷர்கள் இயேசுவிடம் வந்து "நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என கேட்டார்கள். அதற்கு இயேசு "வந்து பாருங்கள்!" என பதில் கூறினார் (யோவான்.1:39). பழைய உடன் படிக்கை தேவ தாசர்கள் "**வந்து கேளுங்கள்**" என மாத்திரமே ஜனங்களை அழைக்க முடிந்தது. ஆனால், புதிய உடன்படிக்கை தேவ ஊழியர்களோ "**வந்து பாருங்கள்!**" என அழைக்க முடிந்தது.

பழைய உடன்படிக்கையின் அழைப்பானது "மலையிலிருந்து மோசே தேவனுடைய செய்தியோடு இறங்கி வந்துவிட்டார்! வந்து கேளுங்கள்" என்பதே ஆகும். ஆனால் புதிய உடன்படிக்கை செய்தியோ "பரலோகத்திலிருந்து இயேசு வந்துவிட்டர்! நீங்கள் யாவரும் வந்து, அவர் வாழும் ஜீவியத்தைப் பாருங்கள்" என அழைப்பதாய் இருக்கிறது.

பழைய உடன்படிக்கை, செய்திக்கு மாத்திரமே முக்கியத்துவம் தந்தது. புதியஉடன்படிக்கையோ, **செய்திக்கு அல்ல செய்தியாளருக்கே** முக்கியத்துவம் கொடுக்கிறது! இன்று, "நாமே செய்தியா யிருக்கிறோம்". ஆகவே "நீங்கள் வந்து, என் மனைவியோடு நான் வாழ்வதையும், சபையில் உள்ள என் உடன் ஊழியர்களோடு நடந்துக் கொள்ளும் சுபாவங்களையும், என் சபையின் வாலிபர்களை நான் நடத்தும் விதத்தையும், என் வரவு-செலவு உண்மையையும், நான் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தையும்.... இவ்வாறு என் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியையும் வந்துப்பாருங்கள். நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் போலவே நீங்களும் என்னை பின்பற்றலாம்!" என்பதே புதிய உடன்படிக்கை (1கொரி.11:1).

இன்று அநேக பிரசங்கிகள், அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகிறார்கள். ஆனால், அந்த மனிதன் தன் மனைவியோடு வாழும் விதத்தை அறியாமலும், அவர் விவாகரத்து செய்தவரா? என அறியாமலும், தன் பிள்ளைகளை எப்படி வளர்த்தார்? என அறியாமலும், எவ்வித தரமுள்ள சபை கட்டினார்? என்பது தெரியாமலும் இருந்தால்.... நானாக இருக்கும் பட்சத்தில், அவரை என் சபையில் பேசுவதற்கு அனுமதிக்கமாட்டேன். வல்லமையான பிரசங்கங்களை வைத்து நான் கவரப்படுவது இல்லை. நான் மதிக்கத்

*தகுந்த ஒரே மனிதன் "நான் எவ்வாறு ஜீவிக்கிறேன் என்பதை வந்துப்பாருங்கள்" என அழைக்கும் நபரே ஆவார். இதற்கு பதிலாக "நான் எவ்வளவு அருமையாய் பிரசங்கிக்கிறேன் அல்லது சுகமாக்கு கிறேன் என்பதை வந்து கேளுங்கள்" என மாத்திரம் கூறுபவர்கள் மீது எனக்கு யாதொரு மதிப்பும் இல்லை. அதுபோன்ற ஒரு மனிதன், பழைய உடன்படிக்கை ஊழியன்! அவன், ஒரு பழைய உடன்படிக்கை சபையை மாத்திரமே கட்ட முடியும். பாபிலோனை கட்டுகிறவர்கள் "வந்து கேளுங்கள்" என்று மாத்திரமே கூற முடியும். இவர்கள் சரியான உபதேசத்தை வலியுறுத்தி பேசுவதற்கும், அதற்காக வாக்குவாதம் செய்வதற்கும் தயாராய் இருப்பார்கள். ஆனால், இவர்களோ தங்கள் ஜீவியத்தின் மூலமாய் 'சத்தியத்தை' காண்பித்திட மாட்டார்கள்.*

> இவர்களின் உபதேசம் மெய்யாகவே சத்தியமாயிருந்தால், அவர்களின் 'ஜீவியத்தின் நடைமுறை' சத்தியமாய் வெளிப்பட்டிருக்கும்! அவர்களின் உபதேசம், பரிசுத்தமான ஜீவியத்தை மலரச் செய்திருக்காவிட்டால், அவர்களின் உபதேசம் தவறு என்பதை நாம் கண்டுக்கொள்ளலாம்.

*இயேசுவிடம் ஜீவன் இருந்தது, அதுவே மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. யோவான் கொண்டிருந்த கருப்பொருள் 'ஜீவன் அல்லது ஜீவியமே' ஆகும். இதுவே அவருடைய சுவிசேஷத்திலும் அவருடைய நிருபங்களிலும் பிரதிபலிக்கிறது. அநேகம் ஆயிரம் ஆண்டுகள் இந்த ஜீவன் மறைந்திருந்தது. மனுஷன், தேவனிடமிருந்து வார்த்தைகளை மாத்திரமே பெற்றான். ஆனால், அந்த வார்த்தை மாம்சமாய் மாறியவுடன், இப்போது அந்த நித்திய ஜீவனை நாம் அனுபவிக்க முடிகிறது! இதுவே மெய்யான சுவிசேஷம். ஆகவேதான் பவுல் "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னை பின்பற்றுங்கள்" என அறைகூவல் விடுத்தார் (1கொரி.11:1). இன்று கர்த்தருடைய ஊழியராய் இருக்கும் ஒவ்வொருவரும், பவுலைப்போலவே கூறிட திராணிக்கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.*

*சில பிரசங்கிகள் "என்னை பின்பற்ற வேண்டாம், கிறிஸ்துவை பின்பற்றுங்கள்" என கூறுவதுண்டு. இவ்வித அறிக்கை தாழ்மையானது போல் தோன்றுகிறது. ஆனால், இது ஆவிக்குரிய அறிக்கை அல்ல. அந்த பிரசங்கி ஏன் அவ்வாறு கூறுகிறார்? ஏனெனில், தன்னுடைய ஜீவியம் மோசமான மாதிரியாய் இருப்பதை அவரே அறிந்திருக் கிறார்!* **இதுபோன்ற நிலை இருந்தால், அவர் பிரசங்கிக்கவே கூடாது.** *அவர் தன் இல்லத்திற்குத் திரும்பி, தன் ஜீவியத்தை முதலாவதாக சீர்ப்படுத்த வேண்டும். நான் மற்றவர்களைப் பார்த்து, நாங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோல நீங்களும் எங்களைப் பின்பற்றுங்கள் என*

அழைக்கும்போது, நாங்கள் கிறிஸ்துவைப்போல மாறிவிட்டோம் என முன் வைத்து கூறுவதில்லை. அவ்வாறு கூறுவது தவறு. நாங்கள் இன்னமும் மலையின் உச்சியை அடையவில்லை. அந்த உச்சித நிலை கிறிஸ்து திரும்ப வரும்போது மாத்திரமே நடைபெறும். அதே சமயம், நாங்கள் மலையின் அடிவாரத்தில் துவண்டு கிடக்கவில்லை! நாங்கள் கூறுவது எல்லாம், **இந்த சுவிசேஷம் எங்கள் ஜீவியத்தை மாற்றத் துவங்கி விட்டது!** எங்கள் சிந்தை வாழ்க்கை மாறி உள்ளது! எங்கள் சம்பாஷணையின் விதம் மாறி உள்ளது! நாங்கள் பணத்தை புழங்கும் முறைமைகள் மாறி உள்ளது! இவ்வாறு பொதுவாய் எங்கள் ஜீவியத்தின் எல்லா நடவடிக்கைகளும் மாறி உள்ளது! ஆகவேதான் மற்றவர்களைப் பார்த்து, நீங்களும் எங்களோடு, கிறிஸ்துவின் சாயலைப் பெற்று முற்றிலும் மறுரூபமாகும் மலைக்கு ஏறிவாருங்கள்! என்றே அழைக்கிறோம்.

மேற்கத்திய நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த ஒரு சகோதரனின் நிகழ்ச்சியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் ரயிலில் பயணம் செய்ய முதல் வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தார். முன் பதிவு செய்யப்பட்ட தன் இடத்திற்கு அவர் வந்தபோது யாரோ ஒருவர் அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அந்த இடத்தில் இருந்து எழுந்திருக்க விருப்பமற்றவராயும் இருந்தார். அவரோடு வாக்குவாதம் செய்ய விரும்பாமல், ஒரு செய்திதாளை கழிவறை வாசலின் முன்பாக விரித்து, அதில் அமர்ந்து கொண்டார். அச்சமயம் உள்ளே வந்த டிக்கட் பரிசோதகர் “இங்கே ஏன் அமர்ந்திருக்கிறீர்கள்?” என ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு அவர் “என்னுடைய இருக்கையில் வேறொருவர் அமர்ந்திருக்கிறார்” என பதிலுரைத்தார். டிக்கட் பரிசோதகர் ஆச்சரியத்துடன் “ஏன் இப்படி செய்தீர்கள்?” என கேட்டார்.

அதற்கு அந்த சகோதரன் “நான் ஒரு கிறிஸ்தவன்! நான் ஜனங்களோடு வாக்குவாதம் செய்வதில்லை!” என பதில் கூறினார். அதைக் கேட்ட டிக்கட் பரிசோதகர் தானும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மாற்றமடைந்தார்.

இந்த டிக்கட் பரிசோதகர் ஒரு வல்லமையான பிரசங்கத்தை கேட்டா மனந்திரும்பினார்? இல்லை .... அவரது உத்தம கிறிஸ்தவ நடக்கையைக் கண்டார்! நாம் உலகத்துக்கு வெளிச்சமாய் இருப்பதின் பொருள் அதுதான். நாம் ரயிலிலோ பஸ்ஸிலோ பயணம் செய்யும் போது, சுய நல மானிடர்களின் அருவருப்பான நடக்கைகளையே பார்த்திருக்கிறோம். இதுபோன்ற இடங்களில்தான், அவபக்தி நிறைந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் அழகையும், தாழ்மையையும், பொறுமையையும் நாம் வெளிப்படுத்தி காண்பிக்க வேண்டும்!

– சகரியா பூணன்

## நேசரின் உறவே, சிலுவையின் பாதையை இலகுவாக்கியது!

*என்னுடைய அதிகமான நேரத்தை 'எனக்குள்ளாக' தேவனோடு ஆழமாய் உறவுகொண்டாடி..... அதன் மூலமாய், என்னைச் சுற்றி நடந்த சம்பவங்களின் துயரங்கள் நீங்கி ஆறுதல் பெற்றேன். அதனிமித்தம், நான் என் கடமைகளைச் செய்து முடிக்க தவறியதும் இல்லை! என் கணவரோ, எப்போதும் படபடப்புடன் இருப்பார்!*

ஆகவே, என்னுடைய அமைதியான ஆழ்ந்த தியானம் அவரை அதிகமாய் எரிச்சலூட்டியது. "என்னை நீ அதிகமாய் கவனிப்பதில்லை!" என ஆத்திரமடைவார்.

*நான் அடிக்கடி, என் வீட்டோடு இணைந்திருக்கும் தோட்டத்திற்கு செல்வதுண்டு. என் வேலையை முடித்துவிட்டு உடனே திரும்பி விடுவேன். என் கணவரோ "தோட்டத்தில் நீ எதையெல்லாம் கண்டாய் என்பதை கூறு!" என கேட்பார். அது ஏனென்றால், அப்படியெல்லாம் தோட்டத்திற்கு சென்று வந்திட அவருக்கு நேரம் இருப்பதில்லை. ஆகவே, நீ தோட்டத்தில் எதையெல்லாம் கண்டாய் என கேட்கும் அவரது கேள்விக்கு, என்னால் போதிய அளவு பதில் சொல்ல முடிவதில்லை! ஆகவே, அச்சமயத்தில் என்மீது அவர் அதிக கோபமடைவார்! இதற்காகவே, தோட்டத்தில் உள்ளவைகளை காணும்படி நான் செல்லத் தொடங்கினேன். கிட்டதட்ட ஒரு நாளில் பத்துமுறை நான் சென்றபோதும், நான் கண்ட முழு விவரங்களையும் என் கணவரிடம் சொல்ல முடியாமல் சில விஷயங்களை மறந்து போனேன். எனவே தோட்டத்தில் உள்ள பூக்களை எண்ணுவதற்கும், அவைகளை மீண்டும் மீண்டும் பார்ப்பதற்கும் தோட்டத்திற்கு நான் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமே .... என் உள்ளத்தில் அளவில்லாத சந்தோஷத்தை தந்திடும் வழியாய் மாறியது! இது எனக்கு, தேவனே தனது* **சிருஷ்டிப்பின் அழகின் மூலமாய், என் சிருஷ்டிகரை சந்திக்க** *ஏற்படுத்தி வைத்த ஏற்பாடு! என உணர்ந்து அளவில்லாத ஆனந்தம் கொண்டேன்!* **"காட்டு புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள்"** *என ஆண்டவர் எனது மகிழ்ச்சிக்காகவே கொடுத்த கட்டளை! என்பதை, தேவன் எனது கணவர் மூலமாக உணரவைத்தது, அப்படியொரு மகிழ்ச்சியை எனக்குத் தந்தது. இப்போது எனது அழகிய தோட்டத்தில், வண்ண வண்ண பூக்களின் மூலமாகவும், சிட்டுச் சிட்டு கலரான பறவைகளின் மூலமாகவும்* **என் விசுவாசம் ஓங்கி வளர்ந்து,** *மகிழ்ச்சியினால் என் உள்ளம் நிறைந்தது. இப்போது என் கணவர் சொல்லி அல்ல, நானே அடிக்கடி தோட்டத்திற்குச் சென்று,*

*அங்கு அமர்ந்து, வண்ண பூக்களையும் ஆடிப்பாடும் குருவிகளையும் அழகிய புற்களையும் கண்டு மகிழ்ந்து, என் நேசரோடு உறவாடி ஆனந்த மடைந்தேன்! இப்போது, "நீ தோட்டத்தில் எவைகளையெல்லாம் கண்டாய்?" என்ற கேள்வியை என் கணவர் என்னிடம் கேட்பதுமில்லை!*

**என் தோட்டத்து அனுபவத்தில் நான் கற்றுக்கொண்ட பாடம் என் ஜீவியத்திற்கு மிக அருமையானதாய் மாறியது. நான் இவ்வாறு தனிமையில் என் தேவனைத்தேடி அமைதியான நிலையில் அவரோடு அமர்ந்து உறவாடி வாழ்ந்திருக்கும் இன்றைய நிலையை, நான் முன்பே கண்டிருந்தால் "என்னுடைய அனைத்து சிலுவைகளும் மிகச் சிறியதும் எளியதுமாய் மாறியிருக்கும்" என்பதை உணர்ந்தேன்.**

*ஆகிலும் நான் தனியே ஜெபித்து வரும்படி என் கணவர் எனக்கு தந்த அனுமதி ½ மணி நேரம் மாத்திரமே! ½ மணி நேரத்தை தாண்டிவிட்டால், என் கணவர் அவரது கைக்கடிகாரத்தைப் பார்த்து பார்த்து எரிச்சலடைய தொடங்கி விடுவார். சில சமயங்களில் "நான் என் வேலையை முடிக்க இன்று 1 மணி நேரம் ஆகும்" என அனுமதி கேட்டால் உடனே கொடுத்து விடுவார். இந்த அறிக்கையை நான் மாற்றி "தேவனோடு அமர்ந்து ஜெபிப்பதற்கு ஒரு மணி நேரம் அனுமதி தாருங்கள்" என கேட்டால் அவர் நிச்சயமாய் அனுமதி தரமாட்டார்.*

*இப்போதெல்லாம், நான் அடிக்கடி சந்திக்கும் துன்பங்களுக்கு தேவனுடைய சமூகத்திற்குச் சென்று, அவருடைய சித்தம் அறிந்து வருவதே எனது ஒரே மன திருப்தியாய் மாறியது! ஆனால் என்னுடைய நிலையோ, ஜெபத்திற்குகூட என் கணவரிடம் அனுமதி கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டேன். எனவே, தோட்டத்திற்குச் சென்று, என் நேசரோடு உறவாடும் இன்பத்தை நான் விரும்பியபடி அனுபவிக்க முடியாமல் உள்ளம் தவித்தேன்.*

*இந்த நிலையில்தான் தேவன் எனக்கு மற்றொரு விடுதலையான ஸ்தலத்தை திறந்து வைத்தார். ஆம்,* **'தேவனுடைய ஆலயமாகிய என் இருதயமே' என் ஜெப ஸ்தலமாய் மாறியது!** *நான் தோட்டத்திற்குச் சென்று ஜெபிப்பது நல்லதுதான், அங்கு என் நேசரோடு உரையாடி, அவருடைய சித்தத்தில் உறைந்திருப்பதும் நல்லதுதான்! ஆனால், அந்த சந்தர்ப்பம் இல்லாத சமயங்களில், என் இருதயத்தின் ஆலயத்தில்* **என் நேசரை தடையின்றி சந்திக்கும் உறவையும், ஐக்கியத்தையும் கண்டேன்.** *தோட்டம் எனக்கு அடைக்கப்பட்டாலும், என் இருதயத்தின் ஆலய கதவு என் ஆண்டவருக்கு எப்போதும் திறந்திருக்கும் பாக்கியத்தைக் கண்டு நான் பேரானந்தம் கொண்டேன்!*

*– மேடம் குயான்*

## காலத்திற்கு ஏற்றபடி 'வேதத்தை' புரட்டுவோர் கள்ள தீர்க்கதரிசிகள்!

*சத்திய ஆவி, ஒருபோதும் 'பரிசுத்த வேதாகம எழுத்தை' புறக்கணித்து விட்டு, தானாய் செயல்படுவதில்லை. ஆகவேதான், பரிசுத்தாவியின் இணைபிரியா ஐக்கியத்தின் வளர்ச்சி, வேத வாக்கியங்கள் மேல் கொண்ட சிநேகத்தின் வளர்ச்சியாகவும் இருந்திட வேண்டும்!*

*மேலும், ஊழிய வளர்ச்சியில் செல்வதாகக் கூறிக்கொண்டு, தன்னோடு சேர்ந்துள்ள* **உடன் கிறிஸ்தவர்களை புறக்கணிப்பதும், பகைப்பதும்,** *சத்தியத்திற்குப் பெரும் பிழையாகும்! அவர்கள் ஜீவியத்திலும் அவர்கள் ஊழியத்திலும் வளர்ச்சி அடைந்திருக்கலாம் .... ஆனால், தன் உடன் சகோதரனைப் பகைத்து அவனை விட்டு விலகுவது, அபாயகரமானதாகும். இந்த சகோதரனுடைய புதிய ஆவிக்குரிய தோற்றம், சிநேகத்தை வளர்க்காமல், அதை வெகுவாய் குறைத்தது ஏன்?*

*ஆகவே, தன் உடன் கிறிஸ்தவர்களோடு, இன்னும் ஆழமான ஐக்கியம் கொள்ளாமல், அவர்களை குற்றம் சாட்டுபவர்களின், புதிய ஆவிக்குரிய வளர்ச்சியை புறக்கணிப்பதே வேதத்தின்படி பாதுகாப்பானதாகும். ஏனெனில் 1யோவான்.3:18,19 கூறுகிறப்படி "இவர்கள் சத்தியத்திற்குரியவர்கள் அல்ல!" என அறிந்திடக்கடவோம்.*

*எந்த ஒரு உபதேசமும், பரிசுத்தத்தை அதிக கவர்ச்சியான அழகுள்ளதாயும், பாவத்தை எந்த ரூபத்திலும் சகித்துக் கொள்ள மறுப்பதாயும் இருக்க வேண்டும்! அப்போது மாத்திரமே அந்த உபதேசங்கள், கறையேதும் இல்லாத உண்மையானவைகள் என நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.*

> ஒரு காலத்தில் தீர்க்கதரிசிகளாய் இருந்தவர்கள் பின் காலத்தில் கள்ளத் தீர்க்கதரிசிகளாய் மாறியது ஏன்? அன்று பரிசுத்தத்தை அழகுறக் காட்டியவர்கள், பாவத்தை சிறிதேனும் சகித்துக் கொள்ளாதவர்கள்..... இப்போது தாங்களும் வஞ்சிக்கப்பட்டு, தெரிந்துக் கொண்டவர்களையும் வஞ்சித்து பிரசங்கிப்பதால் அவர்கள் 'கள்ளத் தீர்க்கதரிசிகளாய்' மாறிப்போனார்கள்! (மத்தேயு. 24 : 24).

*சத்தியத்திற்கு விரோதமான, பிழையான உபதேசங்களுக்கு விலகி வாழ, நம் ஆத்தும வளர்ச்சிக்குரிய விசுவாசத்தோடு சேர்த்து 'ஆரோக்கியமான வசனமும்' வேண்டும் என்பதை நாம் எக்காலத்தும் மறவாதிருப்போமாக!*

*– A.W.டோசர்*

## நமக்கு கல்லறை இல்லை! கர்த்தரிடம் குடியிருப்போம்!!

ஒருமுறை நான் சுவிட்சர்லாந்து தேசத்தில் பிரசங்கிக்க சென்றிருந்தேன். அப்போது நான் சென்ற சபையில் 'கல்லறை திருவிழா' நடந்தது. திரளான வரிசையில் கல்லறை வாசலில் நின்ற மக்கள், தங்கள் கைகளில் மலர்களும் மலர்வளையங்களும் வைத்திருந்தார்கள். அங்கே நின்று கொண்டிருந்த நான், சற்று உரத்த சத்தமாய் சிரித்து விட்டேன். அப்போது அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் என்னை திரும்பிப் பார்த்தார்கள். நான் அவர்களிடம் "உங்கள் அறியா மையை பார்த்தே நான் சிரிக்கிறேன்" என்று கூறி, நான் மீண்டும் அவர்களைப் பார்த்து.....

**"இந்த கல்லறையைச் சுற்றி நின்று, உங்கள் நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள்? நீங்கள் நேசிக்கும் நபர் 'இப்போது இங்கே இல்லை!' மேலும் இவ்வாறு நீங்கள் மலர் கொத்துக்களை கல்லறைக்கு கொண்டு வரும் செயல், விசுவாசமற்ற செயல் என்பதை அறியுங்கள். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், அவரோடு இருக்கும்படி சென்றுவிட்டார்கள்!" என்றேன்.**

....அவ்வாறு குடியிருக்கச் செல்வதை 'கர்த்தரிடத்தில் குடியிருக்கவே நாங்கள் அதிகமாய் விரும்புகிறோம்' என பவுல் கூறினார் (2கொரிந்தியர்.5:8) எனவும் விவரித்து கூறினேன்.

அந்நாட்களில், என் மனைவியும் பெண்கள் கூட்டத்தில் பிரசங்கம் செய்வார்கள். ஒருமுறை என் மனைவி என்னைப் பார்த்து "இன்று நான் **'ஒரு நாளில் நான் அங்கிருப்பேன்'** என்ற தலைப்பில் பேசினேன். ஆகிலும் நான் இப்போது உணர்வதெல்லாம், நான் அவரோடு குடியிருக்கும் நேரம் சமீபமாகிவிட்டது என்றே உணர்கிறேன்" எனக் கூறினாள். நானோ அந்த வேளையில் கிளாஸ்கோ பட்டணத்திற்கு ஊழியம் செய்யும்படி பயணித்தபடியால், என் மனைவிக்கு புன்முகம் காட்டி, கரங்களை அசைத்து, விடை பெற்றேன்! சிறிது நேரம் கழித்து நான் பயணித்த வாகனத்திற்கு பின்னால் வந்த மருத்துவரும், காவல் அதிகாரியும் என்னை நிறுத்தி "உங்கள் மனைவி சபை வாசலில் மரித்து விட்டார்கள்" என அழைத்தனர். அவள் விரும்பியதை, அடைந்து விட்டாள்! என உணர்ந்த நான் சிறிதுகூட அழாமல் 'அந்நிய பாஷையில் ஜெபித்து' என் கர்த்தரை துதித்தேன். நடைமுறை உண்மை என்னவென்றால் "அவள் ஒருவளாய் நின்று, என்னைத் தாங்கி ஆதரித்தாள்" என்பதுதான்! ஆனால், ஆவியில் நிறைந்திருந்த என்னால் துயர் கொண்டு அழ முடியவில்லை!!

என் வீட்டைச் சூழ, திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். என் மனைவியை கிடத்தி இருந்த சவப்பெட்டி அருகே சென்ற நான் ஓர்

ஆழமான ஆதங்கத்தில் "மரணமே, என் மனைவியை எனக்குத் தந்துவிடு" எனக் கூறியதும் அவள் தன் கண்களைத் திறந்தாள். என்னைக் கண்ட ஆர்வத்தில் அவளது கண்கள் படபடத்தது. அதே சமயம் ஆண்டவர் என்னிடம் பேசி "அவள் என்னுடையவள்! அவளது பணி முடிவடைந்தது" எனக்கூறியதும், அந்த கூற்றுக்கு என் தலை வணங்கினேன். என் மனைவியும் ஆழ்ந்த நித்திரை கொண்டாள்.

**என் பிள்ளைகளை நான் அழைத்து, பெட்டியில் கிடத்தி இருந்த என் மனைவியை அவர்களுக்கு காட்டி "அம்மா அந்த பெட்டியில் இருக்கிறார்களா?" என்று கேட்டேன். அதற்கு என் பிள்ளைகள் "அம்மா இங்கே இல்லை அப்பா!" என கூறியதும் பெட்டி மூடப்பட்டது. அவள் கல்லறைக்கா சென்றாள்? இல்லை, கர்த்தரோடு குடியிருக்கவே சென்றுவிட்டாள்!**

இப்போது நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன். "கிறிஸ்துவோடு குடியிருக்கும்படி சென்றுவிட்ட உங்கள் அன்புள்ளோர்களுக்காக நீங்கள் துயரம் கொண்டாடினால்..... உங்கள் மீது கொண்ட அன்பினிமித்தம், நான் உங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன்: உங்களிடம் பவுல் வேதவாக்கியமாய் குறிப்பிட்ட 'இந்த தேகத்தை விட்டு குடிபோகி, **கர்த்தரிடத்தில் குடியிருக்கவே** அதிகமாய் விரும்புகிறோம்' என்ற சத்தியம் உங்கள் கண்களுக்கு புலப்படாது போனதற்காய் வருந்துகிறேன்!" என கூறினேன்.

இன்று திரளான கிறிஸ்தவ ஜனங்களிடம் 'கிறிஸ்தவ விசுவாசம்' இல்லை என்றே காண்கிறேன். நீங்கள் மெய்யாகவே கிறிஸ்தவ விசுவாசம் கொண்டவர்களாய்..... தேவனை ஆழமாய் விசுவாசித்திருந்தால் "எதுவானாலும் சரி ஆண்டவரே! நான் நேசிக்கும் ஒருவரை நீர் எடுத்துக்கொள்ள விரும்பினால், அதை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்கிறேன்" என்று மாத்திரமே தைரிய வாசகங்களை கூறுவீர்கள். இதுபோன்ற விசுவாசம் ஒன்று மாத்திரமே உங்கள் கண்ணீரை அகற்றிட முடியும்! அல்லேலூயா.

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## அந்த பெந்தெகொஸ்தே, இன்று சம்பவித்தால்?

**உ**ங்கள் சபையின் ஞாயிற்றுகிழமை ஆராதனையில் "பெந்தெகொஸ்தேயின் பின்மாரி ஊற்றப்பட்டதாக" சற்று மனதில் நிறுத்திப் பாருங்கள்! நீங்கள் பேதுருவைப்போலவே உன்னத வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டு எழுந்து நிற்கிறீர்கள்! மாய்மால ஜீவியத்தில் திளைத்த **அனனியா,** உங்களிடம் வாசம் செய்த ஓங்கிய ஆவியின் வல்லமைக்கு முன்பாக, அங்கே செத்து வீழ்கிறான்.

அவனைப்போலவே தன்னையும் மாய்மாலத்தில் திளைத்திருந்த அனனியாவின் மனைவி **சப்பீராளும்.....** தன் கணவனின் நிழலில் வீழ்ச்சியுற்று மாண்டாள். இந்த சூழ்நிலையை, இன்றுள்ள கிறிஸ்தவத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

இன்றுள்ள சபை, மாய்மாலத்தை எதிர்த்து நிற்கும் இவ்வித ஆழமான கிறிஸ்தவ தரத்தை மனதார ஏற்றுக்கொள்ளுமா?

அதேபோலவே அபிஷேகத்தில் நிறைந்த பவுல் எழுந்து நின்றான்! தீமையான **'எலிமாவை'** குருடானாகிப் போக, பரத்தின் உத்தரவை பிரகடனம் செய்தான். இதையும், இந்நாட்களில் உள்ள சபையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். உத்தமமாய் நின்று பிரசங்கித்த அந்த பிரசங்கியை, இன்றை விசுவாசிகள் நீதிமன்றத்திற்கு இழுத்து வழக்கு போட்டு விடுவார்கள். ஆம், ஜெபத்தில் தரித்திருந்து ஆவியில் எழுப்புதல் கண்ட சபைக்கு, இந்நாட்களில் கெட்ட பெயர்தான் எஞ்சி நிற்கும்! இவையாவும், உத்தம நல்ல இருதயங்களுக்குத்தான் அதிகமான பாரத்தையும் வலியையும் கொண்டு வரும்..... போலியை தொடர்ந்தவர்களுக்கு அல்ல!

'பிரசங்கிக்கத் துணிந்த' பிரசங்கிகளே உங்கள் யாவரையும் ஒன்றை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்: தாராளமாய் பிரசங்கியுங்கள்... ஆனால், அது இராஜ கெம்பீர பிரசங்கமாய் இருக்கட்டும். இன்றைய பிரசங்க பீடங்களில், மண்ணுலகின் அற்பமானவைகள் மகோன்னத - செய்தியாய் மாறிட கைகொடுத்து விட்டார்கள். "ஆழ்ந்த ஜீவியம்" என்ற அடைப்பு குறியில் துவங்கிய திரளானோர் இன்று 'எலிக் குஞ்சுகளைப்' பிடித்துக் கொண்டு திரிகிறார்கள். வாய்கிழித்து அழிக்க வேண்டிய சிங்கமோ, சபைகளை தாராளமாய் பீறி சீரழித்துக் கொண்டிருக்கிறது!

பவுல் அரேபியாவில் இருந்தபோது அவருக்கு என்ன நடந்தது? அது எனக்கு தெரியது! அது, யாருக்குமே தெரியாது! அந்த பவுல் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டாரா? அதுவும் எனக்கு தெரியாது! சர்வத்தையும் ஆளுகை செய்யும் சிங்காசனத்திற்குரியவர் உயர்த்தப்பட்டதை கண்டாரா? அதுவும் எனக்கு தெரியது. ஆனால், அவர் ஆசியாவையே தலைகீழாய் திருப்பினார்! யூதர்களை அதிர வைத்தார்! ரோமானியர்களுக்கு அச்சுறுத்தலாய் நின்றார்! இருந்த போதிலும், போதகமார்களுக்கு உத்தம சத்தியத்தைப் போதித்தார். மனந்திரும்பிய சிறைச்சாலை அதிகாரிகள் மீது மனதுருக்கம் கொண்டார்! .... ஆ, அவரின் அபிஷேக கனல் எனக்குத் தெரியும்!

ஆம், இந்த பவுலும் அவரோடு இணைந்து நின்ற பிரசங்கி

*சீலாவும் தங்கள்* **ஒருமனம் கொண்ட ஜெபத்தால்** *சிறைச்சாலை கதவுகளை தகர்த்தார்கள். அந்த அரசின் பொது சேதத்தால், மக்களின் வரிச்சுமை கூடினாலும், இவர்களோ மனுஷீக இரக்கத்திற்கு உட்படாமல், தங்கள் எஜமானின் பணியை தொடர்ந்து செய்து நிறைவேற்றினார்கள்.*

*கிறிஸ்துவின் அடிமையாய் நின்ற பவுல், பாவியிலும் கடினமான பாவியாகிய தன்னை தேவன் சந்தித்ததை முழுமனதாய் உணர்ந்து, சென்ற இடங்களிலெல்லாம் தேவனை உயர்த்தி, அதிர வைத்தான்!*

> பவுல் தனது நாட்களில், இந்த உலக வல்லமையை காலின்கீழ் கொண்டு வந்தான்! சாத்தானை தோல்வியின் கீழ், கூனி குறுகிப் போகச் செய்தான்! சொல்லொண்ணா துன்பங்கள் அடைந்தான்! சத்தியத்தினிமித்தம் பிறருடைய நேசத்திற்கு தூரமானான்! எந்த மானிடரும் ஜெபித்திருக்காத அளவு தன் முழங்கால்களை முடக்கி ஜெபித்தான்.

*இன்றும், நமக்கு நம்பிக்கை சின்னமாய் எஞ்சி நிற்பது இந்த முழங்கால் மாத்திரமே! நம் முழங்காலும் முடங்கக்கடவது! அப்போஸ்தல வல்லமையும், அக்கினி பிரவாகமும் இந்த முழங்கால் முடங்குவதைச் சார்ந்தே இருக்கிறது. ஜெபஜீவியத்தில், பரிசுத்த ஆவியின் அக்கினியை நீங்கள் பெற்றிருந்தால், பழைய கதைகளையே பேசி கொண்டிருக்கும் உங்கள் பிரசங்கங்கள் ஒழிந்திடும்! ஆர்த்தெழும் பரத்தின் தீப்பொறி விண்ணிலிருந்து சிதறி, சபையோரை உயிர்ப்பிக்கும்! இது உறுதி!!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## யாரிடமும் பணம் கேட்காத, உத்தம ஊழியம் எங்கே?

**ஆ***ண்டவர் தனது ஊழியத்தில், பணத்திற்காகக் கவலைப் பட்டவரல்ல! என்றாலும், பக்தியுள்ள ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து வந்தார்கள். மக்கெதோனியா, அகாயா விலிருந்த விசுவாசிகள், எருசலேமிலுள்ள சகோதரர்களுக்கு பொருள் சகாயம் செய்தார்கள். இதுபோலவே, அப்போஸ்தலனுடைய வேலைக்காகவும் சபைகள் பொருள் சகாயம் அனுப்பின!* **பணம் தன்னிலே கெட்டதுமல்ல, பிரயோஜனமற்றதுமல்ல!** *அதைச் சம்பாதிக்கிற விதத்திலும், செலவு செய்கிற விதத்திலும்தான் அதன் நன்மையோ தீமையோ இருக்கிறது!*

*தேவ ஊழியம் நடந்தேறும்படி ஆண்டவருக்குப் பிரியமான விதமாய் பொருள் கொடுக்கப்பட வேண்டும்.... அவருக்குப் பிரியமான விதமாகவே பொருளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்! சர்க்கார், அதிகாரத்தோடே வரி வசூல் செய்வதுபோல நமது ஊழிய*

*காரியம் ஒருபோதும் இருக்கக்கூடாது.*

**சபை சம்பந்தமாகப் பலவித செலவுகள் இருப்பதாலும், ஊழிய பணிக்கென பல்வேறு செலவுகள் மாதந்தோறும் இருந்த போதிலும், அதை எந்தெந்த வழியில் பணம் சேகரிக்கலாம் என்னும் கவலை நம்மை எக்காலத்தும் ஆண்டு கொள்ளக் கூடாது!**

*சபையாரின் வருமானத்தைக் கண்டறிந்து, அந்த வீதத்தின்படியே காணிக்கை பெற, மாதந்தோறும் வீடு வாசல் ஏறி பணவசூல் செய்யும்* **கிறிஸ்துவின் ஆவியை இழந்த ஊழியர்கள்,** *இன்று ஏராளம் இருக்கிறார்கள்! சிலர் சந்தோஷமாகக் கொடுக்கலாம். சிலர் வழக்கத்தை அனுசரித்து "என்ன செய்வது, கொடுத்தே தீர வேண்டும்" என மாதச் செலவுகளோடு ஓர் செலவாகக் கொடுக்கலாம். சிலர் கஷ்டத்தோடு கொடுக்கலாம். சிலர் கொடாதபடி காலங் கடத்தலாம். சில தரங்கெட்ட ஊழியர்கள், பாக்கிகளை வசூலிக்கத் தக்க சமயங்களையும் எதிர் நோக்குகிறார்கள். ஞானஸ்நானமோ, கலியாணமோ.... ஏன் சாவு நேரமோ, முதலான காரியங்கள் வரும் போது, சபையாரிடம் பணம் வசூலிக்கும் கொடுமையையும் கேள்விப் படுகிறோம்.* **போதகரின் பண நச்சரிப்பிற்காக,** *கடன் வாங்கியாவது தொகையைச் செலுத்தியவர்களையும் அறிகிறோம். ஒருசமயம், வேறொரு ஆலயத்தில் கலியாண ஆராதனை நடந்தபோது, தாலி கொடாதபடி அப்படியே நின்றுகொண்டிருந்த போதகரைக் கவனித்து, ஏன் ஆராதனை நின்றுபோனதென்று என் பக்கத்திலிருந்தவரைக் கேட்டேன். "காணிக்கை வைக்கவில்லை, தாலி கொடுக்கவில்லை" என்றார்!?*

*இவைகளையும், இதுபோன்ற காரியங்களையும் காணும்போது நமது மனதுக்கு எவ்வளவோ வேதனையாயிருக்கிறது. பண விஷயத்தில், கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமான* **அந்திக்கிறிஸ்துவின் ஆவியே** *சபை ஊழியங்களில் அகோரமாய் தாண்டவமாடுகிறது! உலகத்தார் தங்கள் காரியங்களை எவ்வாறு நடத்துகிறார்களோ, அதுபோலவே சபைகளின் காரியங்களும் இருக்கின்றன! ஆ, இது வேதனை! எப்போப் பார்த்தாலும் "பணம் பணம்" என்று போதகர்கள் பஞ்சரிக்கிறார்கள் என்று சபையார் முறுமுறுப்பதையும் கேட்டிருக்கிறோம்.*

*கிறிஸ்துவுக்குள்ளான சபையின் காரியமோ வேறு! தேவசித்தப்படி உத்தம ஊழியம் நடக்க வேண்டுமென்பதும், சபையார் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுமே நமது பிரதான நோக்கம். பணம், நாம் பிரசங்கிக்கும்*

*சுவிசேஷமல்ல. அதைப் பற்றி நாம் பேசுவதில்லை. தொகை குறிப்பதில்லை. கட்டாயமாக வாங்குவதில்லை. ஞானஸ்நானத்தில், கலியாணத்தில் காணிக்கை வைப்பவர்கள் உண்டு; வைக்காதவர்களு முண்டு. 'அதை' காணிக்கை பெட்டியின் அந்தரங்கத்திற்கு கொடுத்து விடுகிறோம்! இருபட்சத்தாருக்கும் நமது பணிவிடை ஒன்றுபோலவே நடந்தேறும். இந்தப் பரிசுத்த ஊழியத்தை தேவனே முன்னின்று பராமரித்திட அவரிடம் விட்டு விடுகிறோம்!*

**கர்த்தருடைய ஊழியத்திற்கு சபையார் எவ்வளவு கொடுப்பார்களோ அது அவரவருடைய இஷ்டம். அது அவர்களுக்கும் ஆண்டவருக்குமுள்ள காரியம்! கர்த்தர் மோசேயைப் பார்த்து: "மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்கு" என்றார். "அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே (அவனே) கொடுக்கக்கடவன்" என்று ஆவியானவர் பவுல் மூலம் கற்பித்தார். அதுவே பண விஷயத்தில் நமது பிரமாணம்.**

*"பணம் வாங்க வரவில்லையே" என்று கேட்டிருக்கிறார்களே தவிர "பணம் பணம்" என்று தொந்தரவு கொடுக்கிறார்களே என்று நான் ஊழியம் செய்த சபையார் குறைகூறினதில்லை! பொருள் சகாயத்தை ஏற்றுக் கொள்ளும்படி மக்கெதோனியாச் சபைகள் அப்போஸ்தலரை மிகவும் (வருந்தி) வேண்டிக்கொண்டதாக வாசிக்கிறோம் (2கொரி.8:4). பணம் சேகரிப்பதற்காக எவ்விதமான உலக முறைகளையோ, விற்பனைகளையோ, நாடகம், வேடிக்கை களையோ எங்கள் சபையில் நாங்கள் கையாண்டதில்லை! எல்லாரும் சிரிக்கும்படி பொருட்களை விகடம் பேசி, ஏலம்போடும் வழக்கம் நல்லதல்ல. ஒரு முட்டையையோ, ஒரு சீப்பு பழத்தையோ இருவர் போட்டி போட்டுக்கொண்டு ஐம்பது ரூபாய் நூறு ரூபாய் என்று உயர்த்தி விடும் விற்பனை, சபைகளில் நடக்கும் கொடுமை! ஆண்டவருடைய வேலைக்கென்று 'நேரே கேட்டால்' கொடுக்க மனமற்றவர்கள் 'பலரும் காணும்படி' அவர்கள் வேடிக்கை பார்த்து கொடுப்பதை சந்தோஷமாய் கொடுக்கிறார்கள்!* **இவ்வித தகாத முறைகளால் சேகரித்த பணத்தை** *ஆண்டவர் சமூகத்தில் வைத்து: "ஆண்டவரே உமது ஜனம் உமது ஊழியத்துக்காகக் கொடுத்த காணிக்கையை ஆசீர்வதியும்" என்று சொல்வது முழுப் பொய்யல்லவா? கர்த்தருக்கு முன்பாக நிற்கும் உத்தம ஊழியனாய், நான் ஒன்று உங்கள் யாவருக்கும் கூறிக்கொள்வேன்:*

*"பணம் சேகரிப்பதற்காக நாம் மனுஷரைப் பிரியப்படுத்தவோ முகஸ்துதி பேசவோ வேண்டாம்". அப்படியே இஷ்டம்போல் விட்டுவிட்டால் வருமானம் குறைந்துபோகாதா? ஒருவேளை*

*குறையலாம். ஆனால் கர்த்தருடைய உத்தமமான வேலைக்கு பணகுறைச்சலால், ஒரு பாதகம் கூட ஏற்படுவதில்லை! சபையில் 'கர்த்தரை சார்ந்து கொள்ளும்' விசுவாசம் பாதிக்கப்பட மாத்திரமே அனுமதிக்கக் கூடாது!!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## 'ஆவிக்குரிய பெருமை' நம் வளர்ச்சிக்குத் தடை!

*இன்றும் 'தேவனுடைய எச்சரிப்புகளை' சிறிதுகூட மனதில் கொள்ளாமல், அலட்சியமாய் தங்கள் சொந்த வழிகளில் முடங்கி கிடப்பவர்கள் அனேகர்! ஆனால் ஒரு உத்தம கிறிஸ்தவமோ, தங்கள் வாழ்வின் ஒரு நாளைக் கூட 'அலட்சிய போங்காய்' வாழ்ந்திட மாட்டார்கள்!*

*கிறிஸ்தியான், தன் பயணத்தை தொடர்ந்த வேளையில், இயேசு, யோவான் 10 - ல் குறிப்பிட்டதைப்போல் ஒரு மனிதன் சுவர் ஏறி குதித்ததைக் கண்டான். அவனுடைய வாழ்வில், தன்னை தாழ்த்திடும் தாழ்மையோ அல்லது அனுதினமும் எடுக்க வேண்டிய சிலுவையின் பங்கோ, ஏதும் இல்லாதிருந்தது. இவ்வாறு சிலுவையின் வழியில் வராமல், உள்ளே குதித்து வர முயன்றவனின் கரத்தில்,* **பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் 'பத்திரச்சுருள்'** *இல்லாதிருந்தது. இதுபோன்றவர்கள், தாங்களும் மோட்ச பயணிகள் என எண்ணும் துணிகரம் கொண்டு, உள்ளே பிரவேசித்தாலும், பயணத்தின் இறுதி வாசல் வரும்போது, பரலோக வாசலை காப்பவர்கள் "இயேசு உன்னை மன்னித்து நீதிமானாக்கித் தந்த அனுமதிச் சுருள் எங்கே?" எனக்கேட்டு, அவனுக்கு அனுமதி மறுப்பார்கள்! என வேதம் திட்டமாய் கூறுகிறது. இவ்வாறாகவே, இன்றும் பல வருடங்களாய் சபையில் அமர்ந்திருப்பவர்கள் 'சிலுவையின் இடுக்கமான நேர் வழியை' மறுதலித்தவர்கள்! நீங்கள் ஒரு சிறந்த ஐக்கிய சபையில் ஜீவகாலமெல்லாம் இவ்வாறு அமர்ந்திருந்தாலும், சிலுவையின் வழியில் வாழ்ந்திட மறுத்த உங்களிடம் 'இயேசு வழங்கிய அனுமதிச் சுருள் எங்கே?' எனக் கேட்கும் அந்த கடைசி நாளில், நீங்கள் நிச்சயமாய் அதிர்ச்சிக்குள்ளாவீர்கள்!*

*தன் பயணத்தை தொடர்ந்த கிறிஸ்தியான், வழியில் இரண்டு பேரை சந்தித்தான். அதில் ஒருவன் மதிலேறி குதித்தவன் என்பதை கிறிஸ்தியான் அறிந்தான். அவனுடைய பெயரோ "பெயர் கிறிஸ்தவன்". இவன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். கிறிஸ்தவ பெயரோடு திருமணம் செய்தவன், கிறிஸ்தவ ஆலயங்களுக்கு*

தவறாமல் சென்றவன்! இவனிடம் தன்னை தாழ்த்துவதென்பதோ, சிலுவை சுமப்பதென்பதோ, நொறுங்குண்ட ஜீவியம் என்பதோ சிறிதுகூட காணப்படவில்லை. அந்த இரண்டாவது மனிதனின் பெயர் *'மாய்மாலன்'*. நீங்கள் வேதத்தை கவனித்துப் பார்த்தால், இயேசு, வேறு எதைக் காட்டிலும் மாய்மாலத்தையே அதிகமாய் கண்டித்துப் பேசினார்.

**எங்கெல்லாம் மாய்மாலம் இருக்கிறதோ, அங்கே இரட்சிப்பும் அவர்களுக்கு தூரமாய் நின்றுவிடும். இந்த மாய்மாலக்காரர்களின் சொந்த ஊர் 'மாய மகிமை' என்பதேயாகும். இவர்கள், தங்களைத்தான் தாழ்த்துவதோ, தன் சிலுவை எடுத்து குருவை பின்பற்றுவதோ போன்ற ஜீவியத்தை மறுத்து, தங்கள் ஊரார்களைப் போலவே மாய மகிமையை தேடியவர்கள்.**

இந்த இரண்டு பேரும், கிறிஸ்தியானோடு கைகோர்த்து பயணம் செய்வதைப்போல் மாயம் செய்தார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், அவர்களின் மாயம் வெளுத்துப் போனது. சேர்ந்து சென்ற அந்த பயணத்தின்போது **'துன்பத்தின் மலை'** ஒன்றை சந்தித்தார்கள். நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் எதிர்ப்பும், உபத்திரவங்களும் வரும் என இயேசு கூறியிருந்தார். இந்த சரியான நேரத்தில்தான் மாயமான இந்த கிறிஸ்தவர்களின் உண்மை நிலை வெளியானது. எனவே இந்த இரண்டு மாய்மாலக்காரர்களில் ஒருவன் அந்த மலையில் ஏறுவதற்கு பதிலாய் *'அபாயம்'* என்ற எளிய வழிக்கு திரும்பினான். இன்னொருவன் *'அழிவு'* என்ற எளிய வழிக்கு திரும்பி நடந்தான். இந்த இடத்தில் கிறிஸ்தியானும் அந்த மலையைக் கண்டு சற்று சோர்வடைந்தாலும், **அந்த மலை வாரி வழங்கிய நீர் ஊற்றை** கண்டான். தன்னைத் தாழ்த்தி, முழங்கால் படியிட்டு, அந்த ஊற்றுக்கண்ணின் தண்ணீரை பருகி பருகி புத்துணர்ச்சி பெற்றான். அந்த ஜீவத்தண்ணீரே 'பரிசுத்தாவியானவர்!' நாம் சோர்ந்து போகும் நேரமெல்லாம், கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்க 'பரிசுத்தாவியானவரே' நமக்கு எப்போதும் உதவி செய்கிறார்!

கிறிஸ்தியான் அந்த மலையை ஏறிக் கடந்தவுடன், களைப்புடன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அப்போது அவனிடம் பெருமை சற்று தலைதூக்கி, தான் பெற்ற அனுமதி சுருளைக் குறித்தும், ஜெயமாய் கடந்து வந்த பாதையைக் குறித்தும் **மேன்மை பாராட்டி 'பெருமைக்கு' இடம் கொடுத்தான்!** ஒரு மனிதன் பெருமை அடையும்போது என்ன சம்பவிக்கும்? இதுபோன்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் ஆவிக்குரிய தூக்கத்திற்குள் சென்று விடுவார்கள். இவர்களின் எண்ணத்தில், அன்று தேவாலயத்தில் நின்றவனைப் போலவே "நான்

மற்றவர்களைப் போல் இல்லை..... சிறந்த வழியில் நடந்து வருகிறேன்" என்ற ஆவிக்குரிய பெருமையின் எண்ணத்தால் ஆட்கொள்ளப்படுகிறார்கள்! இவர்கள் சந்திக்கும் இந்த அபாயமே, ஆவிக்குரிய வளர்ச்சியை ஸ்தம்பித்திடும் **கொடிய ஆவிக்குரிய தூக்கமாகும்!** இதுபோன்ற "வளர்ச்சியில் ஸ்தம்பிக்கும் நிலை" நம்மில் ஒருவருக்காவது ஏற்படாது இருக்க தேவன் கிருபைச் செய்வாராக!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)

---

## 'சிலரை மாத்திரம் நேசிப்பது' கல்வாரி அன்பு இல்லை!

எங்கள் டோனாவூர் ஆசிரமத்தில் பல்வேறு தரப்பட்ட ரீதியில் 'மனஅளவிலும், சமுதாய அளவிலும் பாதிக்கப்பட்ட' பெண்கள் ஆசிரமத்தின் அடைக்கலத்தில் இருந்தார்கள். காலையிலிருந்து இரவுவரை அவர்களுக்குத் தொண்டு செய்ய, சிறந்த பணியாற்றும் தியாகமுள்ள சகோதரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். எங்களின் ஜெப கூட்டத்திற்கும். தோட்ட வேலைகளுக்கும், ஒழுங்கு செய்யும் பணிகளுக்கும், சமையல் பணிகளுக்கும், ஆஜர் பட்டியல் பணிகளுக்கும், துணிமணிகள் துவைப்பதற்கும், ஆசிரமத்தின் சுத்தம் சுகாதாரத்திற்கும்...... இவ்வாறு பல்வேறு பணிகளுக்கு, **தாழ்மையும் தெய்வ பயமும் உள்ள சகோதரிகள்** ஜெபத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெகு சிறப்பாய் ஆசிரமத்தின் ஊழியங்களை செய்து வந்தார்கள்!

இதுபோன்ற ஊழியங்களில், வெகு மனத்தாழ்மையுடன், எந்த பணிகளையும் கர்த்தருக்கு மகிழ்ச்சியுடன் செய்திட முன் நின்ற சகோதரிகள் என் உள்ளத்தை வெகுவாய் கவர்ந்தனர்! அவர்களில் ஒரு சிலர் எனக்கு மிகவும் பிரியமான சிநேகிதர்களாய் மாறினார்கள். இந்த என்னுடைய நடக்கையானது 'சிறந்ததல்ல' என ஆவியானவர் உணர்த்தினார். மற்ற ஊழிய சகோதரிகளை நான் தூரமாய் வைப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதைக் கண்டேன்! கிறிஸ்துவின் பண்போ **'தயாளம்'** என்பதை நான் அறிந்திருந்தேன். அதாவது, எல்லோரையும் சமமாய் நேசிக்கும் தயாளமான மனம் விரிந்த அன்பு! இப்போது என் உள்ளத்தின் ஏக்கமான ஜெபமாய் இருந்ததெல்லாம் "ஓ கர்த்தாவே, உம்மைப் போன்ற பரந்து விரிந்த தயாள அன்பு என்னிடத்தில் இல்லையே! எனக்கோ கிறிஸ்துவின் தயாள அன்பே வேண்டும்" என ஜெபித்தேன்.

**ஒரு சிலரை எனது நட்புக்கென்றும், எனக்காகவென்றும் வைத்துக்கொள்வது, அந்த 'கல்வாரி அன்பு' இல்லை என்பதை தேவன் என்னிடம் கிருபையாய் போதித்தார்.**

ஓ தேவனே 'தயாள விஸ்தாரம் கொண்ட' உமது கல்வாரி அன்பையே எனக்குத் தாரும்! எனக் கெஞ்சினேன்!!

– ஏமி கார்மைக்கேல்

## 'பரலோகம் அன்று இழந்ததை' தேடவே இயேசு வந்தார்!

*அன்று ஏதேன் தோட்டத்தில் 'இழந்துபோனதை' தேடவே இயேசு இப்பூமிக்கு வந்தார்! (லூக்கா.19:10). அது, "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து உலகத்திற்கு வந்தார்" என்ற ஆத்தும அஸ்தி பாரத்தை விட மேலானது! ஒரு திரண்ட 'ஜனக்கூட்டத்தில்தான்' இயேசு பவனி வந்தார்! ஆகிலும், அந்த 'விசுவாசி - கூட்டத்தில்' இயேசு தேடியதெல்லாம், அன்று பரலோகம் இழந்த திவ்வியத்தையே தேடினார்! அதை, கண்டுபிடித்தார்!!* **சகேயு** *ஓர் ஐசுவரியவானாய் இருந்தாலும், தான் வாஞ்சித்த இயேசுவுக்கு முன்பாக தன் 'தாழ்ந்த நிலையை'* (Short Stature) *உணர்ந்து..... தான் ஒரு ஐசுவரியவான் என்ற மேட்டிமை எண்ணமில்லாமல், ஒரு மரத்தில் அவன் ஏறியதை அவர் கண்டார்!*

அதுவும், 'ஓடிச்சென்று' மரம் ஏறிய செயல், அவனது தெய்வ வாஞ்சையை வெளிப்படுத்தியது (வசனம்.4). தன்னை 'ஒரு பொருட்டென்று' எண்ணாத தாழ்மையும் அவனிடருந்தது!

*அதைக் கண்டு பரவசமடைந்த இயேசு 'சகேயு' என பெயர் கூவி அழைத்தார்! "நீ சீக்கிரம் இறங்கிவா, உன் வீட்டிலே தங்க வேண்டும்!" என ஆனந்த பரவசத்தோடு கூறினார். அது, "நான் வாசம் செய்திட ஒரு கூடாரம் கட்டு" என மோசேக்கு தேவன் கூறியதைப்போல் இருந்தது! இரட்சகர் தங்கும் என் வீடு பரிசுத்தமாய் இருந்திட வேண்டுமே என ..... தான் சீர்ப்பட வேண்டிய, ஒப்புரவாக வேண்டிய விஷயங்களை "ஓரத்தனையாய் அல்ல..... நாலத்தனையாய்" திருப்பிக்கொடுத்து ஒப்புரவாகுவேன்! என்ற அவனது பரிசுத்தமாகுதலின் முழு இருதயம் கண்டு..... இயேசுவின் பரவசம் பன்மடங்காய் கூடியது: "நான் வாசம் செய்யப்போகும் இந்த வீட்டிற்கே இரட்சிப்பு" என முழங்கி..... பரலோகம் இழந்ததை, சகேயுவிடத்தில் கண்டடைந்த பேரானந்தத்தில் "*__இழந்துபோனதைத் தேடவும்__ *இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்!" என்ற தன் வாஞ்சையை பகிரங்கம் செய்தார் (வசனம்.10).*

மேலும், ஏதேன் இழந்த 'முடிவுவரை அன்புகூர்ந்திடும்' தணிந்து போகாத ஆதி அன்பிற்காய் இயேசு அங்கலாய்த்தார்! (மத்தேயு..24:12).

*ஒருவன் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், பரன் இழந்ததை மீண்டும் கண்டடைந்ததற்கும் நிரூபணமாய் இருப்ப தெல்லாம், "இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில்* **முதலாவது** *அன்பு வைத்தபடியே,* **முடிவுபரியந்தமும்** *அவர்களிடத்தில் அன்பு வைத்தார்!" என இயேசு நமக்கு கற்பித்த* **நிலைத்திருக்கும் அன்பை** *நாமும் பற்றி வாழ்வோமாக! ஆமென்.*

*– T.ரத்தினகுமார்*



# தாமஸ்,

## "என் குருவுக்காக பலியானேன்!"

**(AD 34)**

"என்ன? நமது குரு உயிர்த்தெழுந்து, பூட்டிய அறைக்குள் நடந்து வந்தாரா?" என வியந்தான் இயேசுவின் சீஷன் தாமஸ். சீஷர்கள் அனைவரும் தோமாவின் கேள்விக்கு "ஆமாம்" என தலையசைத்தனர். அதற்கு தோமா "அப்படியானால் நீங்கள் பார்த்தது ஒரு ஆவிதான், இயேசு அல்ல" என மறுத்துவிட்டார். மற்ற சீஷர்களோ "இல்லை தோமா, அவர் சிலுவையில் அறையப்பட்ட தனது காயங்களை எங்களுக்கு காண்பித்தார். எங்கள் இருதயம் மனப்பூர்வமாய் அவரை விசுவாசித்தது. நீ எங்களோடு இருந்திருந்தால் நீயும் கண்டிப்பாய் விசுவாசித்திருப்பாய்" என உருக்கத்துடன் கூறினார்கள். ஆனால் தோமாவோ தொடர்ச்சியாக மறுத்து "நீங்கள் அவரை தொட்டு பார்த்தீர்களா? இல்லையே! அப்படியிருக்க நீங்கள் பார்த்தது 'ஆவி இல்லை' என எப்படி நிரூபிக்க முடியும்? நீங்கள் எதை வேண்டுமானாலும் விசுவாசியுங்கள். ஆனால் அவரது சிலுவை காயங்களை நான் தொட்டுப் பார்த்தால் ஒழிய, நம்ப மாட்டேன்!" என கூறினார். ஒருவாரம் கழித்து "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக" எனக் கூறி, இயேசு மீண்டுமாய் தன்னை வெளிப்படுத்தி, தோமாவைப் பார்த்து "உன் விரல்களை நீட்டி என் காயங்களை தொட்டுபார்! அவிசுவாசம் கொள்ளாதபடி விசுவாசம் கொண்டிரு" என கூறியதும்.... தோமா அவரை தொட்டுப் பார்க்காமலே, இயேசுவின் பாதத்தில் விழுந்து "என் ஆண்டவரே! என் தேவனே!" எனக் கூறி, இயேசுவின் மீதுகொண்ட உத்தமத்தை உறுதிப்படுத்தினார். *அதன்பிறகு தோமா இயேசுவை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை.*

சுவிசேஷத்தை அறிவிக்கும்படி பல நாடுகளுக்குச் செல்ல இயேசு சீஷர்களை வழிநடத்தியபோது, தோமாவை வட ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் போக கட்டளையிட்டார். சற்று தயங்கிய தாமஸ், பின்பு தன் எஜமானனின் கட்டளைக்குப் பணிந்து தன் ஊழியத்தை சீரும் சிறப்புமாய் செய்தார். வட ஆப்பிரிக்கா ஊழியத்தை முடித்து தென்னிந்தியாவின் கேரள மாநிலத்தில் ஊழியம் செய்து, அங்கு இயேசுவின் நாமத்தில் *பல அற்புதங்கள் செய்தார்.* பின்பு சென்னை அருகிலுள்ள ஒரு மலை ஜாதியினர், சூரிய தேவதையை வணங்கியதைக் கண்டு அவர்களுக்கு இரட்சகர் இயேசுவை அறிவித்தார். அச்சமயத்தில் சூரிய தேவதை பூசாரி கோபமடைந்து தோமாவை "எரி சூளையில்" போடும்படி செய்தார். தோமா இன்னமும் எரிசூளையில் உயிரோடு நிற்பதைக் கண்டு, கொலை வெறியில் ஈட்டிகளையும், குத்து வாள்களையும் தோமாவை நோக்கி வீசும்படிச் செய்தார்! ஒரு ஈட்டி தோமாவின் மார்பில் ஆழமாய் பதிந்து இரத்த வெள்ளத்தில் தன் குருவின் மேன்மையான பணிக்கு பலியானார்! அவர் மரித்த அங்க அடையாளத்தின் உடல் பகுதிகள் "St.தாமஸ் பெஸ்லிகா" சென்னை மயிலாப்பூர் சபையில் இன்று வரை நினைவாக வைக்கப்பட்டுள்ளது.

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## நிரந்தர பாதுகாப்பு, இயேசுவிடம் மாத்திரமே உண்டு!

பாதுகாப்பு (Security) மனிதனின் அடிப்படைத் தேவையாயிருக்கின்றது. அநேக மனிதர்கள் உலகப்பொருட்களைத் தங்கள் வசமாக்குவதன் மூலமாகவும், அவற்றைச் செலவழிப்பதின் மூலமும் தங்களுடைய பாதுகாப்பைத் தேடுகின்றனர்! மற்றும் அநேகர் தங்கள் பாதுகாப்பையும், இளைப்பாறுதலையும் போதையூட்டும் மருந்துகளிலும், அசுத்தமானதும் அருவருக்கப்படத்தக்கதுமான புத்தகங்களிலும், உள்ளுறுப்புகளைத் தெள்ளெனக் காட்டும் நிர்வாணமான சினிமாக்களிலும், ஆபாசமான டெலிவிஷன் நிகழ்ச்சிகளிலும் அல்லது தங்கள் மனதைத் தங்கள் வாழ்வின் கஷ்டங்களிலிருந்து சற்று அப்பால் விலக்கிக் காத்துக்கொள்ளக் கூடிய எதையாகிலும் தேடுகின்றவர்களாய் இருக்கின்றார்கள்.

மனிதனின் மனம் மிகவும் பெலவீனமானதொன்றாகும். அது தனிமையாக இன்றைய உலகத்தின் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் எதிர்த்து நின்று மேற்கொள்ள வலிமையற்றதாயிருக்கின்றது. யாதொரு பணமும், அந்தஸ்தும், பதவியும் நம் மனதிற்கு நிம்மதி தந்து பாதுகாப்பு தர முடியாது! **இதன் காரணமாகத்தான், மனநோய் மருத்துவமனைகள் மனநோயாளிகளால் நிறைந்து கிடக்கின்றன.** நாளுக்குநாள் இவ்வுலகில் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்லுவதும் இதன் எதிரொலியாகவேதான், என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மனித பாதுகாப்பின் உறைவிடம், ஒன்றே ஒன்றில்தான் உண்டு! அதுதான் கல்வாரிச் சிலுவையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் அனைத்துப் பிரச்சனைகளையும், பாடுகளையும், போராட்டங்களையும் அங்குதான் மேற்கொண்டார். இதன் காரணமாகக் கிறிஸ்தவர்களாகிய நாம்:

"அன்புள்ள இயேசுவே, என்னுடைய பிரச்சனைகளையெல்லாம் தேவரீருடைய கரங்களில் நான் சமர்ப்பிக்கின்றேன். நான் இனி அவைகளுக்காகக் கவலைப்படப்போவதில்லை. எனது நிமித்தமாக நீர் எனது பிரச்சனைகள் யாவையும் எடுத்துக்கொண்டபடியால், நான் உமக்கு நன்றி கூறுகின்றேன்" என்று நாம் தைரியமாக ஜெபிக்கலாம். ஆம், நிரந்தர பாதுகாப்பு இயேசுவிடம் மாத்திரமே உண்டு! என அவரை விசுவாசித்து தஞ்சம் கொண்ட உங்களை கர்த்தர் அரவணைத்து பாதுகாப்பார்!!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.